# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 15.04.2026**

**அசல் வழக்கு எண். 152/2015**

**பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில்வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

வாதி தவசிக்கண்ணுத்தேவர் பழனிச்சாமியிடமிருந்துஎவ்வளவு விஸ்தீரணம் உடைய இடத்தை கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிராது தபசில் சொத்துக்களில் உள்ள தொழுவம் என்னால் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தொழுவம் 1ம் தபசில் சொத்திற்கு வடக்குப்பக்கமும், தெற்குபக்கமும் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தொழுவத்தின் கிழமேல் தென்தலை விஸ்தீரணம் 2 அடி என்றால்சரிதான். மேற்படி தொழுவத்தின் வடதலை விஸ்தீரணம் 4 அடிஇருக்குமா என்றால் இல்லை. 15 அடி இருக்கும். (சாட்சி தாமாக முன்வந்து மேற்படி தொழுவத்தின் தென்தலை தொழுவமும் 15 அடி இருக்கும் என்றார்). மேற்படி தொழுவத்தின் தென்வடல் விஸ்தீரணம் 79 அடியா என்றால் இல்லை. 79–1/4 அடி.

2. பிராதை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் கட்டியுள்ள வீடு 1ம் தபசில் சொத்தின் நடுமையத்தில் 19 அடியில் கட்டப்பட்டுள்ளது என்றால் நான் வாதியின் இடத்தில் வீடு கட்டவில்லை. என்னுடைய வீட்டின் மாடிப்பகுதியில் மழை தண்ணீர்குழாய் உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் 2 ஜன்னல் மற்றும் அதற்கான சன்சேடு வைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வீட்டின் கீழ்தளத்தில் கழிவுநீர் குழாய் ஒன்று அமைத்துள்ளேன் என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் மழைத்தண்ணீர் பிராது 2ம் தபசில் இடத்திற்கு சென்றடையுமா என்றால் இல்லை. அது குழாய் வழியாக பஞ்சாயத்து ரோட்டில் உள்ள வாறுகாலில் சென்றடையும். எனது வீட்டிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் மழைத்தண்ணீர் பிராது 2ம் தபசில் இடத்திற்கு சென்றடையும் என்றாலும், வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. 08.03.2004ம் தேதி பழனிச்சாமியிடமிருந்து எவ்வளவு விஸ்தீரணம் உடைய இடத்தை நான் கிரையம் வாங்கினேன் என்றால் 7 சென்ட் இடத்தை நான் கிரையம் வாங்கினேன். மேற்கண்ட 7 சென்ட் இடத்தின் சர்வே எண் என்னவென்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட இடத்தின் தென்வடல் மற்றும் கிழமேல் விஸ்தீரணம் எனக்கு

தெரியுமா என்றால் தெரியும். அதன் தென்வடல் அடி 77–1/4 ஆகும். அதன் கிழமேல் அடி 39–1/2 ஆகும். நான் பழனிச்சாமியிடமிருந்து மேற்கண்ட இடத்தை கிரையம் வாங்கும்போது அது காலிமனையாக இருந்தது என்றால் சரிதான். நான் பழனிச்சாமியிடமிருந்து கிரையம் வாங்கியபோது மேற்கண்ட இடத்தின் விஸ்தீரணங்கள் கிரைய ஆவணத்தில் தவறாக குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற இடத்தின் கிழமேல் விஸ்தீரணம் 77–1/4 அடி என்றும், தென்வடல் விஸ்தீரணம் 39–1/2 அடி என்றும் அந்த கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2014ம் வருடம் மேற்கண்ட கிரைய ஆவணத்தில் தென்வடல் மற்றும் கிழமேல் அடி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதை தெரிவித்து சீர்திருத்தப்பத்திரம் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட விஸ்தீரணம் தவறாக குறிப்பிடப்பட்டிருக்கும் விபரம் எனக்கு முதல் கிரையம் பெற்றதிலிருந்து எத்தனை நாட்களுக்கு பிறகு தெரியும் என்றால் சுமார் 2–3 வருடங்களுக்கு பிறகு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழககுரையில் இடத்தை கிரையம் வாங்கியவுடன் தொழுவம் அமைத்துள்ளதாக தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை.

4. 2004ம் வருடம் கிரையம் பெற்று 2006 தொழுவம் அமைப்பதற்கு ஆரம்பித்து 2008ம் வருடம் தொழுவம் அமைப்பது முடிக்கப்பட்டது. எனது எதிர்வழக்குரையில் கிரையம் வாங்கிய இடத்தை கிரையம் வாங்கியவுடன் தொழுவம் அமைத்துள்ளதாக தெரிவித்துள்ளது தவறானது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் நான் இடம் கிரையைம் வாங்கியவுடன் எனது வீட்டை கட்ட ஆரம்பித்துவிட்டேன் என்று தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. நான் 2004ம் வருடம் பழனிச்சாமியிடமிருந்து கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சொத்து விபரத்தின் அடிப்படையில்தான் வீடு மற்றும் தொழுவம் அமைத்துள்ளேன் என்றால் சரிதான்.

5. 2013ம் வருடம் வேறொரு சொத்தை பழனிச்சாமியிடமிருந்து கிரையம் வாங்கினேனா என்றால் கிரையம் வாங்கினேன். 2013ம் வருடம் நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2013ம் வருடம் நான் கிரையம் வாங்கிய சொத்தின் கிழமேல் மற்றும் தென்வடல் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2013ம் வருடம் நான் கிரையம் வாங்கிய சொத்தின் மொத்த

விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 5–1/4 சென்ட் ஆகும். 2013ம் வருடம் 5 சென்ட் இடத்திற்கு கிரைய தொகையை கொடுத்துவிட்டு 5–1/4 சென்டுக்கு கிரைய ஆவணம் நான் பிறப்பித்துக் கொண்டேன் என்றாலும், அதுசம்பந்தமாக பழனிச்சாமி எனக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றாலும் சரியல்ல. பழனிச்சாமி தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. 2013ம் வருடம் 5 சென்ட் இடத்திற்கு கிரைய தொகையை கொடுத்துவிட்டு 5–1/4 சென்டுக்கு கிரைய ஆவணம் நான் பிறப்பித்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. பழனிச்சாமியின் வாரிசுகளை இது சம்பந்தமாக விசாரிப்பதற்கு எனக்கு ஆட்சேபனை எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

6. 2013ம் வருடம் நான் கிரையம் வாங்கிய சொத்து பிராது 1ம் தபசில் சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் அந்த இடம் எனது வீட்டிற்கு வடபக்கம் உள்ளது. 2013ம் வருடம் நான் கிரையம் வாங்கிய சொத்தின் மேற்குமாலாக வாதியின் வீடு காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட சொத்தை நான் கிரையம் வாங்கிய சமயத்தில் அது காலிமனையாக இருந்தது என்றால் சரிதான். 2013ம் வருடம் நான் கிரையம் வாங்கிய சொத்திற்கான பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கான பட்டாவை இன்னும் நான் பெறவில்லை. 2013ம் வருடம் 5 சென்ட் இடத்திற்கு கிரைய தொகையை கொடுத்துவிட்டு 5–1/4 சென்டுக்கு கிரைய ஆவணம் நான் பிறப்பித்துக் கொண்டேன் என்றாலும், அதனால் பழனிச்சாமி வருவாய்த்துறையினரிடம் எனக்கு பட்டா வழங்குவதற்கு எதிராக ஆட்சேபனை செய்தார் என்றாலும், எனவே எனக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

7. 2004 மற்றும் 2013 ஆகிய வருடங்களில் நான் கிரையம் பெற்ற சொத்திற்கான புல வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி புலவரைபடங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்கண்ட இருஇடங்களையும் அரசு சர்வேயர் மூலம் செல்லான் கட்டி அளந்துபார்த்தேனா என்றால் அளந்து பார்த்தேன். எனது எதிர்வழக்குரையில் மேற்கண்ட இரண்டு இடங்களும் மேற்கூறியவாறு எப்போது அளக்கப்பட்டது என்று குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட சர்வேயர் அளந்ததற்கான அறிக்கையை எதுவும் இந்நீதிமன்றததில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் அவ்வாறு எந்த அறிக்கையையும் சர்வேயர் எனக்கு கொடுக்கவில்லை. அதனால் நான் தாக்கல் செய்யவில்லை. பிராது தபசில் சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் மூலம பார்வையிட்டு அளவீடு செய்ய எனக்கு ஆட்சேபனை எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

8. 08.03.2004ம் தேதி பழனிச்சாமியிடமிருந்து கிழமேல் 39–1/2 அடி மற்றும் தென்வடல் 77–1/4 என்ற விஸ்தீரணம் உடைய சொத்தை கிரையம் வாங்குவதாக கிரைய ஆவணத்தில் குறிப்பிடுவதற்கு பதிலாக கிழமேல் 77–1/4 அடி மற்றும் தென்வடல் 39–1/2 அடி விஸ்தீரணம் உடைய இடம் கிரையம் பெறப்படுவதாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள சொத்து விபரத்தின் அடிப்படையில் என்னுடைய வீடு மற்றும் தொழுவத்தை நான் அமைத்துள்ளேன் என்றால் சரிதான். வாதி தன்னுடைய இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துளளதாக கூறி அதை அகற்றித்தருமாறு என்னிடம் கேட்டார் என்றாலும், நான் அகற்றித்தராததால் வாதி எனக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. வாதி மேற்கூறியவாறு எனக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும், காவல்நிலையத்திலிருந்து என்னை அழைத்து கண்டித்தபிறகு நான் கேட்காததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. செல்வராஜ், காசிப்பாண்டியன் ஆகியோர்களுக்கு வாதியின் சொத்து மற்றம் என்னுடைய வீடு ஆகியவற்றை பொறுத்து எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். மேற்கண்ட செல்வராஜ் மற்றும் காசிப்பாண்டியன் ஆகியோர் இவ்வழக்கில் அவசியதரப்பினர் இல்லைஎன்றால் சரிதான். வாதி வெளியூருக்கு சென்ற சமயத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமிப்பு செய்து பிராது 2 மற்றும் 3 தபசில் சொத்துக்களை நான் ஏற்படுத்தியுள்ளேன் என்றாலும், அந்த ஆக்கிரமிப்புகளை எனது செலவில் அகற்ற நான் கடமைப்பட்டுள்ளேன் என்றாலும், வழக்குரையில் வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.